டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண்
ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 18.02.2026 புதன்கிழமை | பக்கங்கள் 32 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 198 - Madurai | Online Edition

# கோதுமை வைக்கோல் எரிப்பதை தடுக்க காற்றுதர மேலாண்மை ஆணையம் அதிரடி உத்தரவு

புது தில்லி, பிப்.17

தேசிய தலைநகர் பிராந்தியம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் காற்று மாசுபாட்டைக் குறைக்கும் நோக்கில், 2026 அறுவடை காலத்தில் கோதுமை, வைக்கோல் எரிப்பதைத் தடுக்கவும், முற்றிலுமாக ஒழிக்கவும் 'தேசிய தலைநகர் பிராந்தியத்தின் காற்றுத் தர மேலாண்மை ஆணையம்' விரிவான சட்டரீதியான உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவு பஞ்சாப், ஹரியானா மற்றும் உத்திரப் பிரதேச மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள விவசாய நிலங்கள் கோதுமை, வைக்கோல் மேலாண்மைக்காகக் கண்டறியப்பட்டு (மண்ணிலேயே மக்கச் செய்தல் அல்லது மாற்றுப் பயன்பாடு), முறையாக வரைபட மாக்கப்பட வேண்டும். பயனுள்ள கண்காணிப்புக்காக, ஒவ்வொரு 100 விவசாயிகளுக்கும் ஒரு நோடல் அதிகாரி நியமிக்கப்பட வேண்டும்.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வாடகையின்றி இயந் திரங்கள் கிடைப்பதை உறுதி செய்யவும், 'பராலி பாதுகாப்புப் படை' என்ற தனிப்படையை மாவட்ட அளவில் அமைத்துக் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தவும் ஆணையம் உத்தரவிட்டு உள்ளது. மேலும், மாலை நேரங்களில் ரோந்துப் பணிகளை அதிகரிப்பதோடு, விதிமீறுபவர்கள் மீது சுற்றுச்சூழல் இழப்பீடு வசூலிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

# தமிழக வேளாண் பட்ஜெட் முக்கிய அம்சங்கள்

2026-2027-ஆம் ஆண்டுக்கான வேளாண் பட்ஜெட்டை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று தாக்கல் செய்தார்.

அதில் உள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு :

● புதிதாக 2 லட்சம் விவசாயிகளின் நிலங்களுக்கு இலவச மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

● கடந்த 5 ஆண்டுகளில் இயற்கை பேரிடருக்காக ரூ.2,045 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் 25.36 லட்சம் விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள்.

● 5 ஆண்டு காலத்தில் 5.70 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.1,894 கோடி ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

● 5 ஆண்டுகளில் குளிர் பதனிடும் கிடங்குகளுக்காக 27 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

● கடந்த 5 ஆண்டுகளில் 15 புதிய உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டுள்ளன.

● நுண்ணீர் பாசனத்திட்டத்தை பயன்படுத்தும் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

● இ-வாடகை செயலி மூலம் 3,816 வேளாண் இயந்திரங்கள் குறைந்த கட்டணத்தில் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப் பட்டது.

● உழவர் சந்தைக்கு கொண்டுவரப்படும் காய்கறிகளின் அளவு தினமும் அதிகரித்து வருகிறது.

● உழவர் சந்தைகளில் சுமார் 4 லட்சம் மக்கள் தினந்தோறும் வருகை தருகின்றனர்.

● புவிசார் குறியீட்டுக்காக 41 பொருட்கள் விண்ணப்பிக்கப் பட்டு, ஒன்பது பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப் பட்டுள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

● கிருஷ்ணகிரியில் புதிதாக தோட்டக்கலை கல்லூரி திறக்கப் பட்டுள்ளது.

● நாகை, சிவகங்கை, கரூரில் புதிதாக அரசு வேளாண் கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளது.

● 30 ஆயிரம் நபர்களுக்கு தேனீ வளர்ப்பு மதிப்பு கூட்டு இயந்திரங்களை இயக்குதல் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

● 150 ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் மின்னணு சந்தை உடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

● 150 விவசாயிகள் அயல் நாடுகளுக்கு அழைத்துச் செல்லப் பட்டுள்ளனர்.

● இயற்கை எழில் கொஞ்சும் பூங்காக்களை உருவாக்க தனியாரிடமிருந்து 176 ஏக்கர் அரசு நிலம் மீட்கப்பட்டுள்ளது.

● பயிர்க்கடன் உள்ளிட்ட வேளாண் சார்ந்த நடவடிக்கை களுக்காக வட்டி மானியம் ரூ.3002 கோடி வழங்கப்பட்டுள்ளது.

# இயற்கை பூச்சி விரட்டி '3G கரைசல்' செயல் விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.17

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அருகே உள்ள விவசாய நிலங்களில், குமரகுரு வேளாண்மை கல்லூரி மாணவர்கள் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு இயற்கை பூச்சி விரட்டியான 3G கரைசல் தயாரிப்பது குறித்து செயல்முறை விளக்கம் அளித்தனர்.

ரசாயன பூச்சிக்கொல்லி களுக்கு மாற்றாக, சமையலறையில் உள்ள பொருட்களைக் கொண்டே இந்தப் பூச்சி விரட்டியைத் தயாரிப்பது எப்படி என்பது குறித்து விவரித்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

எல்லா நாளும்
தள்ளுபடி உண்டு
உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல்
நகை எடுக்க வரும்போது
அக்ரி டாக்டர் வாசகர்
என்று அறிமுகப் படுத்திக்
கொண்டு சிறப்பான
சேவையையும், பிரத்யேக
தள்ளுபடியும் பெறுங்கள்.
இந்த தள்ளுபடி உங்களுக்கு
மட்டுமே அதுவும் எல்லா
நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# விவசாயிகள் மற்றும் விதை விநியோகஸ்தர்கள் இருப்பு வைத்துள்ள விதைகளை பரிசோதனை செய்து கொள்ள அழைப்பு!

ஊட்டி, பிப்.17

நீலகிரி மாவட்ட விவசாயிகள் மற்றும் விதை விநியோகஸ்தர்கள் தாங்கள் இருப்பு வைத்துள்ள விதைகளை உதகை, ரோஸ் கார்டன், தோட்டக்கலை இணை இயக்குநர் வளாகத்தில் அமைந்துள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரியை கொடுத்து விதைப்பரிசோதனை செய்து கொள்ளலாம்.

இந்நிலையத்தில் விதையின் தர நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் போன்றவை பரிசோதனை செய்யப்படுகின்றன. ஒரு விதை மாதிரிக்கு ரூ.80/- மட்டுமே பரிசோதனைக் கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் இரகம், குவியல் எண் ஆகியவை குறித்த விபரச் சீட்டுகளை கொடுத்து, விதையின் தரத்தை அறிந்து கொள்ளலாம்.

விதைப்பரிசோதனைக்கு சமர்ப்பிக்க வேண்டிய பிரதான காய்கறிகளுக்கான விதை மாதிரியின் குறைந்தபட்ச அளவு பின்வருமாறு :

கேரட், காலிப்ளவர், முட்டைகோஸ், ப்ரொக்கோலி, நூல்கோல் மற்றும் டர்நீப் 10 கிராம், பீட்ரூட் மற்றும் முள்ளங்கி 50 கிராம், பீன்ஸ் 450 கிராம், பட்டாணி 250 கிராம், பாலக்கீரை 25 கிராம் ஆகும்.

இவ்வாறு பயிருக்கேற்ப குறைந்தபட்ச விதை மாதிரியை உதகை, விதைப்பரிசோதனை நிலையத்தில் கொடுத்து விதைப் பரிசோதனை செய்து விதையின் தரத்தை அறிந்து விதைப்பதன் மூலம் தரமற்ற விதையினால் ஏற்படும் தேவையற்ற செலவுகளை தவிர்த்துக்கொள்ளலாம் என எஸ்.நவீன், வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், உதகை அறிவுறுத்தினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

நன்றி

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு

## நீடித்த நிலையான கரும்பு சாகுபடியில்

## ஒரு பருகரணை வெட்டும் இயந்திரத்திற்கு காப்புரிமை




கோயம்புத்தூர், பிப்.17

கரும்பு சாகுபடியில் நடவு, களையெடுத்தல், மண் அணைத்தல், மருந்தடித்தல் மற்றும் அறுவடை போன்ற வேலைகள், மற்ற பயிர் சாகுபடி செய்வதைக் காட்டிலும் மிகவும் கடினமான வேலையாகும். தொழிலாளர்கள் மூலம் கரும்பு கரணை வெட்டுவதற்கு கூர்மையான கத்தியை பயன்படுத்தி வெட்டும் போது கணிசமான அளவிற்கு கரணைகளின் கணுக்கள் சேதமடைகின்றன. மேலும் இந்த பணிகளை செய்து முடிக்க அதிக நேரமும், அதிக செலவும் மற்றும் அதிக மனச்சோர்வும் ஏற்படுகிறது. மேலும், கரும்புகள் ஒரே சீராக மற்றும் பருமனான கரும்புகளை அதிக எண்ணிக்கையில் பேண நீடித்த நிலையான கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிக்கிறது.

இதனைக் கருத்தில் கொண்டு, எஞ்சினால் இயங்கும் ஒரு பரு கரும்பு கரணை வெட்டும் இயந்திரம் வடிவமைக்கப்பட்டது. இயந்திரமானது 4 குதிரைத்திறன் கொண்ட எஞ்சினால் இயங்க வல்லது. இதில் பிரதான சட்டம், எஞ்சின், விசை பரிமாற்று தண்டு, வட்டு ரம்பம் மற்றும் விசை பரிமாற்று கச்சைகள், பாதுகாப்பு மூடி, வெட்டும் கரும்புகள் வைக்கும் இடம், கரணைகள் வெளிவரும் அறை, நேரம், கரணை கணக்கீடும் சாதனம், அதிர்வை குறைக்கும் பகுதி மற்றும் போக்குவரத்து சக்கரங்கள் பாகங்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கரும்புகள் வெளிவரும் அறையின் உள் பகுதியில் தெர்மாக்கோல் பொருத்தப்பட்டுள்ளது. இதனால் கரும்பு கரணையின் சேதாரம் குறைக்கப்படுகிறது. நேரம் மற்றும் கரணை கணக்கீடு கருவியின் மூலம் வெட்டப்படும் கரணைகளின் எண்ணிக்கை கணக்கிடப் படுகிறது. இது 12ஏ பேட்டரியால் இயக்கப்படுகிறது. ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு செல்வதற்கு ஏற்ப 4 சக்கங்கள் பொருத்தப்பட்டுள்ளது.

கரணைகள் பிசிறு இல்லாமலும், சேதாரம் இல்லாமலும் வெட்ட, வட்டு ரம்பத்தின் சுழற்சி வேகம் ஒரு நிமிடத்திற்கு 2200 சுற்றுகள் இருக்க வேண்டும். ஒரு மணி நேரத்தில், 1700 ஒரு பரு கருணைகள் வெட்ட முடியும்.

முளைப்புத்திறன் 95 சதவீதம், 50 சதவிதத்திற்கு மேல் நேரம் மற்றும் செலவை குறைக்க முடியும். இவ்வியந்திரத்தின் விலை ரூ.34,000.

மேலும், இக்கருவிக்கான காப்புரிமையை இந்தியாவின் அறிவுசார் சொத்து அலுவலகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 20 ஆண்டுகளுக்கு வழங்கியுள்ளது.




# அறம் செய்ய விரும்பு அறக்கட்டளையின் அறம் விருதுகள் 2026 – வேளாண்மை அதிகாரிக்கு வாழ்நாள் சாதனை விருது



சென்னை, பிப்.17

அரியலூர் மாவட்டம் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் பணி புரிந்து வரும் வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் த.ராதாகிருஷ்ணனுக்கு அறம் செய்ய விரும்பு அறக்கட்டளையின் அறம் விருதுகள் 2026ல் வாழ்நாள் சாதனை விருது வழங்கப்பட்டது.

இவர், வேளாண்மை படிப்பை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், மதுரை, வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பிஎஸ்சி அக்ரி கல்ச்சர், மற்றும் எம்எஸ்சி அக்ரிகல்ச்சர் படிப்பை முடித்த பிறகு வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் வேளாண்மை கல்லூரியிலும் பணிபுரிந்துள்ளார். தனியார் வேளாண்மை கல்லூரியில் உதவி பேராசிரியர் மற்றும் விடுதி காப்பாளர், சுகர் மில்லில் கரும்பு அலுவலர், ஏஎம்இ பவுண்டேனில் பண்ணை மேலாளர் மற்றும் பயிற்சி பயிற்றுனர், மற்றும் என்ஜிஓவில் உதவி பேராசிரியர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் போன்ற நிறுவனங்களில் பணிபுரிந்துள்ளார். அதன் பின் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடைபெற்ற வேளாண்மை அலுவலர் தேர்வில் தேர்ச்சி பெற்று, வேளாண்மை அலுவலர் பணி துவங்கி, பதவி உயர்விற்கு பின் தற்போது வேளாண்மை உதவி இயக்குனராக பணிபுரிந்து வருகிறார்.

இவர் வேளாண்மை கல்லூரிகளிலும் ஆராய்ச்சி நிலையங்களும் பணி புரிந்த காலத்தில் போட்டித் தேர்வுகளுக்காக புத்தகங்கள் எழுத ஆரம்பித்து இதுவரை நூற்றுக்கணக்கான புத்தகங்களை எழுதி உள்ளார். குறிப்பாக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும்

பள்ளி மாணவர்களுக்காகவும் புத்தகம் எழுதி உள்ளார். குறிப்பாக வேளாண்மை அலுவலர், தோட்டக்கலை அலுவலர் போன்ற போட்டி தேர்வுகளுக்காக புத்தகங்களை எழுதி உள்ளார். இவர் இதுவரை 25க்கும் மேற்பட்ட தேசிய மற்றும் சர்வதேசிய அளவில் அவார்டுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் பெற்றுள்ளார்.

குறிப்பாக பல சமூக சாதனை யாளர் விருதுகள், இந்திய பசுமைப் புரட்சியின் தந்தை டாக்டர் பேராசிரியர் எம் எஸ் சுவாமிநாதன் வாழ்நாள் சாதனையாளர் விருது, நார்மன் பர் லாக் இளம் விஞ்ஞானி விருது, டாக்டர் வர்க்கீஸ் குரியன் பெஸ்ட் எக்ஸ்டென்ன் ஒர்க்கர் விருது, ப்ரொபனல் லீடர்ஷிப் விருது, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்து பெஸ்ட் ஒர்க்கர் விருது, கல்வி மாமேதை விருது, போன்ற விருதுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வாங்கி உள்ளார். 50க்கும் மேற்பட்ட பயிற்சி மற்றும் கருத்தரங்களில் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றுள்ளார். விவசாயிகள் பயன்படும் வகையில் பல்வேறுபட்ட வேளாண்மை தொழில் நுணுக்க செய்திகளை 75 க்கு மேல் யூ டீப் மூலம் போட்டுள்ளார். இவரின் செயலை அறிந்து 2025ஆம் ஆண்டு உலக மனித அமைதி பல்கலைக்கழகம் பட்டமளிப்பு விழா சென்னையில் நடைபெற்ற விழாவில் இவரக்கு வேளாண்மையில் கௌரவ டாக்டர் பட்டம் சான்றிதழ் மற்றும் மெடல் கொடுத்து கௌரவித்தது.

இந்நிலையில் இவரின் செயல்கள் மற்றும் சாதனைகளை பாராட்டி திரைப்பட இயக்குனர் கே.பாக்யராஜ் மற்றும் நீதியின் குரல் சி.ஆர்.பாஸ்கர் ஆகியோர் அறம் செய்ய விரும்பு அறக்கட்டளையின் அறம் விருதுகள் 2026ன் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கினர்.

அதனை உயர் கல்வித் துறை அமைச்சரிடம் வழங்கி வாழ்த்து பெற்றார்.



# மதுரையில் மாவட்ட அளவிலான சிறுதானிய திருவிழா

மதுரை, பிப்.17

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டாரத்தில் வேளாண்மைத் துறை சார்பில் மாவட்ட அளவிலான சிறுதானிய திருவிழா நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை சார்பில் மாவட்ட அளவிலான சிறுதானிய திருவிா பேரையூரில் திவ்ய குரு மஹாலில் 17.2.26 அன்று நடைபெற்றது.

இவ்விழாவை மாவட்ட ஆட்சியர் பிரவீன் குமார் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில், வேளாண் இணை இயக்குநர் கே.பி.முருகேசன், வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) இராணி, தோட்டக்கலை துணை இயக்குநர் பிரபா, வேளாண் துணை இயக்குநர் (வேளாண் விற்பனை மற்றும் வணிக தறை) மெர்சி ஜெயராணி, (வேளாண்மை தணை இயக்குநர் (விதை ஆய்வு) சிங்கார லீனா, வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் சுரேஷ், ஜோதிலட்சுமி உள்ளிட்டோர் கலந்த கொண்டனர்.

இவ்விழாவில் விவசாயிகளுக்கு சிறுதானிய சாகுபடி தொழில் நுட்பங்கள், சிறுதானியத்தில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள், சிறு தானிய பயன்பாடு, அதன் மதிப்பு கூட்டல், சந்தை படுத்துதல் உள்ளிட்ட தொழில் நுட்பக் கருத்துக்களை விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோருக்கு எடுத்துக் கூறினர். இத்திருவிழாவில் கல்லுப்பட்டி, சேடபட்டி, உசிலம்பட்டி, திருமங்கலம், கள்ளிக்குடி வட்டாரங்களில் இருந்து 500 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இத்திருவிழாவில் வேளாண்மை துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை, விதைச் சான்ற ளிப்புத் துறை, வேளாண்மை பொறியியல் துறை சார்பிலும் தனியார் நிறுவனங்கள் சார்பிலும், சிறுதானிய மதிப்புக்கூட்டிய பொருட்கள் தொழில் முனைவோர் சார்பிலம் கருத்துக்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. இத்திருவிழாவில் கலந்து கொண்ட விவசாயிகள் அனைவரும் பார்வையிட்டனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பருத்தி, மிளகாயில் அறுவடை மற்றும் விற்பனையில் கவனிக்க வேண்டிய உத்திகள்





தற்போது பருத்தி மிளகாய் இரண்டுமே வணிக ரீதியான பயிர்கள் தற்போது அறுவடை பணி இந்த 2 பயிர் களிலும் நடைபெற்று வருகின்றன.

அதில் என்னென்ன தொழில்நுட்பங்களை கையாண்டால், அறுவடை & விற்பனையில் வெற்றிகரமாக செயல்படலாம். அவற்றை பற்றி விரிவாக பார்ப்போம்.

**பருத்தி**

1) பருத்தியை பொருத்தவரை அதனுடைய நிறம், சுத்த தன்மை, மென்மை, குறைவான ஈரம் ஆகிய 4 (நான்கும்) விலையை நிர்ணயிக்க கூடிய காரணிகள். எனவே பருத்தி அறுவடையில் நன்கு மலர்ந்த (காய் வெடித்த) பருத்தி சுளையை மட்டும் செடியிலிருந்து பறிக்க வேண்டும்.

2) 3-4 நாட்கள் இடைவெளியில் பருத்தி அதுவும் காலை நேரங்களில் எடுப்பது நல்லது. அப்போது தான் காய்ந்த இலை, சருகுகள், பருத்தியில் ஒட்டாது.

3) எடுக்கப்பட்ட பருத்தியை மணல் பரப்பில் காய் வைக்க வேண்டும். நேரடியாக வெயிலில் உலர வைத்தால், பஞ்சின் நிறம் குறைந்து விடும், அத்துடன் மென்மை தன்மையும் பாதிக்கும்.

4) நன்றாக உலர்த்தி சருகுகள் கொட்டை பருத்தி இல்லாத வாறு தரம் பிரித்தெடுக்க வேண்டும்.

5) பருத்தி வீடுகளில் காற்றோட்டமான இடத்தில் தரையில் மணல் பரப்பி சேமிக்க வேண்டும்.

6) பருத்தியை ரகங்கள் வாரியாக தனியாக தனியாக சேமிக்க வேண்டும்.

**மிளகாய்**

1) மிளகாய் செடியில் நன்றாக பழங்கள் முழுவதும் சிவப்பாக மாறியுடன் பறிக்க வேண்டும். சொத்தை பழங்களை தனியாக சேகரிக்கவும்.

2) பழங்களை பறித்த அன்றே நிழலில் காய வைக்க வேண்டும்.

3) மிதமான வெப்ப நிலையில் காலை / மாலையிலும் 4 நாட்களாவது காய வைக்க வேண்டும்.

4) பனி அதிகமாக இருந்தால் பனியின் தாக்கம் மிளகாய் பழங்களை தாக்கும். அவற்றை தடுக்க செடிகளின் மீது படுதா/கவர் போட்டு மூடி வைக்க வேண்டும்.

5) மிளகாய் வத்தல் சிவப்பாக இருந்தால் தான் நல்ல விலை கிடைக்கும். தவறான சேமிப்புகளால் வத்தல் சில சமயங்களில் கருப்பாக மாறிவிடும். இதனால் விலை குறைவாக கிடைக்கும். நல்ல விலைக்கு விற்பனை செய்ய முடியாது.

6) விற்பனைக்கு கொண்டு செல்லும் போது மிளகாய் வத்தலை சாக்கு பையில் போட்டு அமுக்கிவிடக் கூடாது. அவ்வாறாக செய்தால் வத்தல் உடைந்து நெருங்கி விடும்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

## தலைக் கவசம் உயிர்க் கவசம்



# விதைகளை பரிசோதிக்க விவசாயிகளுக்கு அழைப்பு!

திருவண்ணாமலை, பிப்.17

தற்போது மாசி பட்டம் தொடங்கி இருப்பதால் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தங்களிடம் உள்ள எள் மற்றும் மணிலா விதைகளை விதைப்பிற்கு முன் பரிசோதனை செய்து கொள்ளலாம். விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம். விதைகளை பரிசோதனை செய்வதன் மூலம் இடுபொருட்கள் செலவினை குறைத்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெறவேண்டும். குறைந்த செலவில் அதிக மகசூல் பெற விதைப்பரிசோதனை செய்த பின் விதைகளை பயன்படுத்துவதன் மூலம் விதைகளின் முளைப்பு திறன் குறைபாடு இல்லாமல் இருப்பதையும் விதைகளில் பிற இரக விதைகள் உள்ளதா என்பதை அறிவதன் மூலம் கலப்பு விதைகள் பயன்படுத்துவதை தவிர்க்கலாம். மேலும் விதையின் ஈரப்பதம் மற்றும் சுத்தத்தன்மை ஆகியவற்றை அறிந்து பயன்படுத்துவதன் மூலம் பயன்படுத்தும் விதைகள் முளைக்க தரமானதா என்பதை தெரிந்து கொள்ளலாம். திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு விதைப் பரிசோதனை நிலையத்தில் விவசாய பெருமக்கள் தங்களிடம் உள்ள விதைகளை அனுப்பி அவற்றின் ஈரப்பதம், பிற இரக கலவன், முளைப்புத் திறன், புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியவனவற்றை பரிசோதனை செய்து அதன்பின்பு விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

விதை மாதிரிகளை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். விதைகளை அனுப்பும் போது பயிரின் பெயர், இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறிப்பிட்ட விண்ணப்ப படிவத்துடன் ஒரு மாதிரிக்கு ரூ.80/– வீதம் விதைப் பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும். விதை மாதிரிகளை மூத்த வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், டாங்காப் கட்டிடம், வேங்கிக்கால், திருவண்ணாமலை 606 604 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இதனை ஜெ.பத்மா, மூத்த வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், தெரிவித்தார்.

# பருத்தியில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை பற்றி வேளாண் மாணவர்கள் விளக்கம்

நாமக்கல், பிப்.17

நாமக்கல் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் பிஜிபி வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள், தங்களது கிராமப்புற அனுபவப் பயிற்சி (RAWE) திட்டத்தின் கீழ் விவசாயிகளை நேரில் சந்தித்து களப்பயிற்சி மற்றும் தொழில்நுட்ப விளக்கங்களை வழங்கி வருகின்றனர்.






இந்த முயற்சியின் முக்கிய நோக்கம், நவீன வேளாண் முறைகளை கிராமப்புற விவசாயிகளிடம் கொண்டு சேர்த்து, நிலைத்துவமான உற்பத்தியை மேம்படுத்துவதாகும்.

அதன் ஒரு பகுதியாக, அகரம் கிராமத்தைச் சேர்ந்த பருத்தி விவசாயி மாரிமுத்துவின் வயலில் மாணவர்கள் பார்வையிட்டனர். வயலில் காணப்பட்ட பயிர் நிலை, பூச்சி தாக்குதல்களின் தன்மை மற்றும் பரவல் குறித்து ஆய்வு செய்து, விவசாயியுடன் விரிவான கலந்துரையாடல் நடத்தினர். குறிப்பாக வெள்ளைஈ, சுருட்டுபூச்சி மற்றும் துளைப்பூச்சி போன்ற முக்கிய பூச்சிகள் குறித்து எடுத்துக்கூறப்பட்டது.

மாணவர்கள் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) முறையின் முக்கியத்துவத்தை விளக்கினர். இயற்கை எதிரி உயிரிகளை பாதுகாப்பது, விளக்கு பொறி மற்றும் பெரோமோன் பொறி அமைத்தல், மஞ்சள் ஒட்டுபலகை பயன்படுத்துதல், வயலில் முறையான கண்காணிப்பு மேற்கொள்ளுதல் போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும், ரசாயன மருந்துகளை தேவையான அளவில் மட்டுமே, பரிந்துரைக்கப்பட்ட அளவுக்குள் பயன்படுத்த வேண்டும் என்பதையும் வலியுறுத்தினர். இதனால் உற்பத்தி செலவு குறையும், சுற்றுச்சூழல் பாதிப்பு தவிர்க்கப்படும் மற்றும் பயிரின் தரம் மேம்படும் என்று தெரிவித்தனர்.

இந்த களப்பயிற்சி நிகழ்வின் மூலம் மாணவர்கள் அறிவியல் அறிவையும், விவசாயிகள் அனுபவ அறிவையும் பரிமாறிக் கொண்டனர். இதுபோன்ற விழிப்புணர்வு முயற்சிகள், நிலைத்துவமான வேளாண் வளர்ச்சிக்கும் மற்றும் விவசாயிகளின் வருமான உயர்வுக்கும் முக்கிய பங்காற்றும் என்பதில் ஐயமில்லை.

# உயிர்ம வேளாண்மையில் ஊட்டச்சத்து மேலாண்மை

இராமநாதபுரம், பிப்.17

விவசாயத்தில் அதிக விளைச்சல் பெறுவதற்காக செயற்கை உரங்களையும் பூச்சி மற்றும் பூஞ்சாண கொல்லிகளை பயன் படுத்தியதால் மண்ணின் இயற்கை வளம் குறைந்து மண்ணில் வாழும் நுணணுயிர்களின் எண்ணிக்கை மற்றும் செயல்பாடு மிகவும் குறைந்தது. மண் வளத்தை பெருக்க பயிர்ச் சுழற்சி முறை ஒருங்கிணைந்த பண்ணைய முறை, பசுந்தாள் உரப் பயிர்களை பயிரிடுதல் பயிர் கழிவுகள், இதர வேளாண் கழிவுகள், அங்கக உரங்கள், நுண்ணுயிர் உரங்கள், மண்புழு உரங்கள், ஊட்டமேற்றிய தொழுவுரம் மற்றும் எண்ணெய் வித்துகளின் புண்ணாக்கு போன்றவற்றை பயன்படுத்த வேண்டும்.

## நீர்பிடிப்பு திறன் அதிகரிக்கும்

பசுந்தாள் உரங்கள், மணிலா, அகத்தி, சித்தகத்தி, கொளுஞ்சி, தக்கைப்பூண்டு மற்றும் நரிப்பயறு போன்ற பசுநதாள் உரங் களை சாகுபடி செய்யும் நிலத்திலேயே பயிரிட்டு அவை விதைத்த 40-50 நாட்களில் மண்ணில் மடித்து உழுது விட வேண்டும். இவ்வாறு செய்கையில் 15 முதல் 20 டன் பசுந்தாள் உரம் மண்ணிற்கு கிடைப்பதோடு 50 முதல் 70 கிலோ தலைச்சத்து, 10-20 கிலோ மணிச்சத்து 40-50 கிலோ சாம்பல் சத்து ஒரு எக்டர் நிலத்திற்கு கிடைக்கும். பசுந்தாள் உரமிடுவதால் மண்ணின் அமைப்பு மேம்படும். நீர்பிடிப்பு திறன் அதிகரிக்கும். மண் அரிமானம் குறையும். மேலும் அவை மண்ணிற்கு ஊட்டம் அளித்து மண் வளத்தைக் காக்கும்.

## பசுந்தழை உரங்கள்

வயல் வரப்புகள் தரிசு நிலங்கள் சாலையோரங்கள் மற்றும் காடுகள் வளரும் வாகை, புங்கம், வேம்பு, மயில் கொன்றை மரங்களின் இலைகள் மரத்தின் சிறு குச்சி கொம்புகள் ஆகிய வையே பசுந்தழை உரத்தின் மூலமாகும். அவற்றை நிலத்தில் இடுவதால் மண்ணின் இயற்பியல் குணங்கள் மேம்படும். காரத் தன்மையுள்ள மண் சீர்திருத்தப்படும் மற்றும் வேர் முடிச்சு நூற்புழுக்களை கட்டுப்படுத்தும்.

## உயிர் உரங்கள்

உயிர் உரங்கள் மண்ணில் இடப்படும் அனைத்து இடுபொருட்களும் சிதைவுற்று அங்கக மூலங்களாக மாற்றம் பெறுவதற்கு கோடிக்கணக்கான நுண்ணுயிரிகள் பெரும் பங்கு வகிக்கின்றன. இவற்றை மண்ணில் இடும்பொழுது மண்ணில் அதன் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதோடு பயிர்களுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களையும் மேம்படுத்தி பயிர்களுக்கு ஊட்டமளிக்கிறது. மண்ணில் இடப்படும் மணிச்சத்தில் பெரும் பகுதி மண்ணில் ஏற்படும் வேதிமாற்றத்தை கரைக்க முடியாத நிலைக்கு மாற்றப்பட்டு பயிர்கள் எடுத்துக்கொள்ள முடியாத சூழல் ஏற்படுகிறது. அதனைப்போக்க பாஸ்போபாக்டீரியா போன்ற நுண்ணுயிர் உரங்கள் உதவுகின்றன. வேர் உட்பூசணம் தூரத்தில் இருக்கும் மணிச்சத்தை பயிர்களுக்கு கொணர்ந்து சேர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

## தொழு உரங்கள்

பண்ணைக்குப்பை மற்றும் கால்நடை தீவனக் குப்பைகளை மாட்டுச் சிறுநீர் (கோமியம்) கலந்து ஒரு நாள் வைக்கவும். தரைக்கு மேல் 45 செ.மீ. வரும்வரை இந்த கலவையை இட்டு பின் சேற்று மண் கலந்து பூசவும். சுமார் 4-5 மாதத்திலிருந்து எரு தயார் நிலைக்கு வரும். அதில் முறையே தழைச்சத்து 0.5, மணிச்சத்து 0.2 மற்றும் சாம்பல் சத்து 0.5 சதவிகிதம் என்றளவில் கிடைக்கும். அதனை பரிந்துரைப்படி (எக்டருக்கு 12.5 டன்கள்) ஒவ்வொரு பயிருக்கும் இடுவது மண்ணின் அங்கக கரிமத்தை கூட்டும். மண்புழு உரத்தில் 0.5 முதல் 1.5 சதவிகிதம் தழைச்சத்து, 0.1 முதல் 0.3 சதவிகிதம் மணிச்சத்து மற்றும் 0.15 முதல் 0.6 சதவிகிதம் சாம்பல் சத்தும் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

பயிர்களில் அதிக விளைச்சலைப் பெற மண்ணில் பெற மண்ணில் போதுமான அளவில் கிட்டும் நிலையில் உயிர்ச் சத்துகளை நிலை நிறுத்துவதற்கும் மண்ணின் இயற்பியல் குணங்களை மேம்படுத்துவதற்கும் மண்வாழ் உயிரினங்களின் மகத்தான செயல்பாட்டிற்கும் அடிகோலும் அங்கக பொருட்களின் பயன்பாட்டை அதிகரித்து வளங்குன்றா உயிர்ம வேளாண் முறையை பின்பற்றுவதற்கு இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் முன்வரவேண்டும் என்று இராமநாதபுரம் மாவட்ட விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் பொ.இரத்தினகுமார் கேட்டுக் கொள்கிறார்.

**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes com
Website : rithvikpipe com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail com
Website : rithvikpipe com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பாரம்பரிய பயறுவகை ரகங்களின் மதிப்பூட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் பற்றிய பயிற்சி




கோயம்புத்தூர், பிப்.17

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பயிர் மேலாண்மை இயக்ககம், வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோயம்புத்தூர் 16.02.26 அன்று பாரம்பரிய பயறுவகைகளின் மதிப்பூட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் என்ற தலைப்பில் விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோருக்கான பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இந்த பயிற்சி வளர்ந்து வரும் நாடுகளில் எதிர்பார்க்கப்படும் காலநிலை மாற்றுச் சூழ்நிலைகளின் கீழ் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்த காலநிலை மாற்றத்திற்குத் தாங்கும் திறன் கொண்ட பயிர்களைப் பயன்படுத்துதல் என்ற திட்டத்தின் கீழ் கிராண்ட் சேலன்ஜ்ஸ் கனடா நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்டது. முனைவர் எஸ்.கோகிலவாணி, உதவி பேராசிரியர் (வேளாண் வானிலையியல்) வரவேற்புரை வழங்கி, திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் பாரம்பரிய பயறுவகைகளின் அவசியத்தை பற்றி விளக்கினார். இந்த பயிற்சியின் முக்கிய நோக்கம், ஊட்டச்சத்து மிகுந்த பாரம்பரிய பயறு வகைகளை பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், அறிமுகப்படுத்துதல் மற்றும் வாழ்க்கை முறை நோய்களுக்கு எதிரான பாதுகாப்பை வலுப்படுத்துதல் ஆகும்.

வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் என்.கே.சத்தியமூர்த்தி, மாறிவரும் காலநிலை மற்றும் அதன் வேளாண் உற்பத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்து சிறப்புரை வழங்கினார். அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ்.கார்த்திகேயன், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை நுகர்வோர் விரும்பும் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். பயிற்சியை முனைவர் எம்.கே.கலாராணி (இயக்குநர் பயிர்

மேலாண்மை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்) தலைமை வகித்து தொடங்கி வைத்தார். அவர் மாறிவரும் காலநிலைக்கு ஏற்ப பெண்களின் வாழ்வாதாரம் மேம்படுத்துவதற்கு இம்மாதிரியான மதிப்புக்கூட்டல் தொழில் பயிற்சி மிகவும் உறுதுணையாக இருக்கும் என எடுத்துரைத்தார். மேலும் அவர் காலநிலைமாற்றத்தை பற்றியும் அதனால் பயிர்களில் ஏற்படும் பாதிப்பு குறித்தும் எடுத்துரைத்தார். அதன் பின் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்பங்களை மதிப்புக் கூட்டலில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்று கூறினார்.

இந்த பயிற்சியின் முக்கிய நோக்கம், ஊட்டச்சத்து மிகுந்த பாரம்பரிய பயறுவகைகளை பயன்படுத்துவதற்கான விழிப் புணர்வை ஏற்படுத்துதல், அறிமுகப்படுத்துதல் மற்றும் வாழ்க்கை முறை நோய்களுக்கு எதிரான பாதுகாப்பை வலுப் படுத்துதல் ஆகும். அடுத்து உணவு அறிவியல் மற்றும் ஊட்டச் சத்து துறையின் பேராசிரியர் முனைவர் பி.கீதா, பருப்பு வகை களின் மதிப்புக்கூட்டல் தயாரிப்புகள் குறித்து விளக்கமளித்தார்.

மனித வன மேலாண்மை, வேளாண்மை மற்றும் ஊரக மேலாண்மை துறை பேராசிரியர் முனைவர் எம்.மலர்கொடி, தொடக்க நிறுவனமாக (Startup) ஆரம்பிப்பதற்கு முன் பின்பற்ற வேண்டிய வணிகத் திட்டங்கள் மற்றும் வணிக நெறிமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

ஜிதேந்திரன் பி.பி. பிரிவு மேலாளர், விவசாயிகளுக்கான கடன் வசதிகள் மற்றும் வங்கி ஆதரவுகள் குறித்து விளக்கமளித்தார். வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தின் நிர்வாக இயக்கு நரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான ஏ.வி.ஞானசம்பந்தம் விவசாயிகளை தொழில் முனைவோராக மாற்றுவதில் வேளாண் வணிக மேம்பாட்டின் (Agri Business Development) பங்கு குறித்து எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் வடமேற்கு மண்டலத்தைச் சேர்ந்த தொடக்க நிறுவனங்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின் முடிவில் உணவு மற்றும் வேளாண் செயலாக்க பொறியியல் துறையின் உதவி பேராசிரியர் முனைவர் எஸ்.பர்வீன் நன்றி உரையாற்றினார்.

# பாரத் விஸ்தார் வரலாற்று வெளியீடு மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பப் பயிற்சி



கடலூர், பிப்.17

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலத்தில், 17.02.26 அன்று, பாரத் விஸ்தார் வரலாற்று வெளியீடு மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பப் பயிற்சி நடைபெற்றது. வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன், இப்பயிற்சியை துவக்கி வைத்தார். மேலும் 'பாரத் விஸ்தார் வரலாற்று வெளியீடு பற்றி விரிவாக எடுத்துரைத்து மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களில் புதிய இரகங்களை விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். முனைவர் க.கலைச்செல்வி (உழவியல்), தொழில்நுட்ப உரையில் எண்ணெய் வித்துப் பயிர்களில் உழவியல் தொழில்நுட்பங்கள், களை மேலாண்மை, உரம் மற்றும் சாகுபடிகுறிப்புகள் பற்றிவிரிவாக எடுத்துரைத்தார்.

முனைவர் கண்ணன் (உணவியல் துறை), எண்ணெய் வித்துப் பயிர்களில் மதிப்பு கூட்டுதல் பற்றி தெளிவாக விளக்கினார். முனைவர் ஜெ.ஜெயகுமார் (நூற்புழுவியல் துறை), எண்ணெய் வித்துப் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு கூறினார். மேலும் இப்பயிற்சியில் கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 82-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# நெல்லின் தரம் அறிந்திட விதைப்பரிசோதனை அவசியம்

சிவகங்கை, பிப்.17

சிவகங்கை மாவட்டத்தில் சம்பா பருவத்தில் விவசாயப் பணிகள் தொடங்கப்பட்டு தற்போது நெல் அறுவடைப் பணிகள் முடிவடைந்து உள்ளன. நல்ல தரமான நெல்லை உயர்ந்த விலையில் விற்பனை செய்து கூடுதல் லாபம் பெற அனைத்து விவசாயிகளும் விதைப் பரிசோதனை செய்திட வேண்டும்.




**நெல்லின் தரத்தை நிர்ணயிக்கும் முக்கிய அளவீடுகள் பின் வருமாறு :**

**1. புறத்தூய்மை (PHYSICAL PURITY)**

புறத்தூய்மை என்பது ஒரு விதை மாதிரியில் உள்ள தூய விதையின் சதவீத அளவை குறிக்கிறது. அதாவது அந்த மாதிரியில் உண்மையான பயிர் விதை எவ்வளவு உள்ளது என்பதைக் கணக்கிடுவது. தரமான நெல்லுக்கு 98% புறத்தூய்மை அவசியமாகிறது.

**புறத்தூய்மையின் முக்கியத்துவம்**

- அதிக முளைப்புத்திறன்
- நல்ல தளிர் வளர்ச்சி
- ஒரே மாதிரி வயல்வெளி
- அதிக விளைச்சல்
- தரமான விதை சான்றிதழ் பெற உதவும்

**2. முளைப்புத்திறன் (GERMINATION)**

முளைப்புத்திறன் (Germination %) என்பது ஒரு விதை மாதிரியில் உள்ள விதைகளில் எத்தனை சதவீதம் ஆரோக்கியமான தளிராக வளரக்கூடியது என்பதை குறிக்கும். தரமான நெல்லுக்கு 80% முளைப்புத்திறன் அவசியமாகிறது. 14வது நாள் முளைப்புத்திறன் சதவீதம் கணக்கிடப்படுகிறது.

**3. ஈரப்பதம் (MOISTURE)**

நெல் அறுவடைக்குப் பின்னர் சரியான ஈரப்பத நிலையில் சேமிப்பு செய்யப்படாத பட்சத்தில், பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு நெல் மணிகள் உள்ளாக நேரிடும். இதனால் நெல்லின் தரம் குறைந்து, விவசாயிகள் நல்ல விலைக்கு விளைபொருட்களை விற்பனை செய்ய முடியாத நிலைஏற்படுகிறது. எனவே, அறுவடை செய்யப் பட்ட நெல் மணிகளை நன்கு உலர்த்தி, சுத்தம் செய்து, 13%அல்லது அதற்கும் குறைவான ஈரப்பதம் உள்ள நிலையில் மட்டுமே சேமிப்பு செய்ய வேண்டும். இவ்வாறு சரியான ஈரப்பதத்தில் சேமிப்பு செய்தால், நெல்லை நீண்ட நாட்கள் பூச்சி மற்றும் நோய் பாதிப்பின்றி பாதுகாப்பாக வைத்திருக்க முடியும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

**4. பிறரக விதை % (ODV)**

ஒரு நெல் விதை தொகுதியில், குறிப்பிட்ட ஒரு வகை (Variety) விதைகளுடன் வேறுபட்ட மற்ற நெல் வகைகள் கலந்து இருப்பதை குறிக்கிறது.

**பிறரக விதை ஏற்படும் காரணங்கள்**

- விதை உற்பத்தி வயலில் தனிமைப்படுத்தல் தூரம் (Isolation distance) பின் பற்றாதது
- கலப்பு அறுவடை
- கலப்பு சேமிப்பு
- சுத்தம் செய்யாத இயந்திரங்கள்

நெல் விதையில் ODV குறைவாக இருந்தால் மரபியல் தூய்மை பாதுகாக்கப்படும். அனுமதிக்கப்பட்ட பிறரக விதை % ஆதார ரக விதைகளுக்கு 0.05% மற்றும் சான்று விதைகளுக்கு 0.20% என்ற அளவிலும் உள்ளது. நெல் மணிகளின் மேற்கண்ட தரத்தை துல்லியமாக அறிந்து கொள்ள, சிவகங்கை-தொண்டி சாலையில் அமைந்துள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் ரூ.80 செலுத்தி விவசாயிகள் பரிசோதனை செய்து கொள்ளலாம்.

மேற்கண்ட இத்தகவலை, சி.சிவகாமி, விதைப்பரிசோதனை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், மதுரை மற்றும், ச.பாலகணபதி, வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், சிவகங்கை தெரிவித்தனர்.



# பருத்தி காய்ப்புழு மேலாண்மை குறித்து வேளாண் மாணவி பயிற்சி



மதுரை, பிப்.17

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டாரம், அம்மாப்பட்டி கிராமத்தில் கிராமப்புற பணி அனுபவத் திட்டத்தின் கீழ் பருத்தி காய்ப்புழு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு மற்றும் செயல்முறை பயிற்சி நடைபெற்றது.

மதுரை வேளாண்மைக் கல்லூரி மாணவி ரா.லோஹிதா இந்நிகழ்ச்சியை நடத்தி, பருத்தியில் அதிக சேதத்தை ஏற்படுத்தும் காய்ப்புழுவின் தாக்கம், அதன் வாழ்வு சுழற்சி மற்றும் ஆரம்ப நிலையிலேயே தாக்கத்தை கண்டறியும் வயல் ஆய்வு முறைகளை விளக்கினார். ஒரு தாவரத்திற்கு 1-2 புழுக்கள் அல்லது சுமார் 5 சதவீத காய்கள் சேதமடைந்தால் உடனடி கட்டுப்பாட்டு நடவடிக்கை அவசியம் என்பதை கூறினார். மேலும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளில் காலத்திற்கு ஏற்ற விதைப்பு, வயல் சுத்தம், பாதிக்கப்பட்ட காய்களை சேகரித்து அழித்தல், ஏக்கருக்கு 5 இனக்கவர்ச்சி பொறிகள் அமைத்தல், பறவைக் கூண்டுகள் பொருத்துதல், முட்டை அழிக்கும் உயிரியல் பகை பூச்சிகளை விடுதல் மற்றும் வேப்பச்சாறு 5 சதவீதம் தெளித்தல் போன்ற சுற்றுச்சூழல் நட்பு முறைகள் குறித்து எடுத்துரைத்தார். தவிர்க்க முடியாத சூழலில் மட்டுமே பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை சரியான அளவில் மாற்றி மாற்றி பயன்படுத்த வேண்டும் என்றும், பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் தங்களது சந்தேகங்களுக்கு தெளிவு பெற்று, அறிவியல் அடிப்படையிலான மேலாண்மை முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் உற்பத்தி செலவை குறைத்து மகசூலும் தரமும் உயர்த்த முடியும் என்பதை உணர்ந்தனர்.

# நவீன வேளாண்மையில் உழவு முதல் அறுவடை வரை இயந்திரங்களின் பங்கு

வேளாண்மை மனித வாழ்வின் அடித்தளமாக விளங்குகிறது. காலப்போக்கில் அறிவியல் வளர்ச்சியுடனும் தொழில்நுட்ப முன்னேற்றத்துடனும் வேளாண்மை முறைகளும் பெரும் மாற்றங்களை கண்டுள்ளன. இன்றைய நவீன வேளாண்மையில், உழவு முதல் அறுவடை வரை பல்வேறு நிலைகளில் இயந்திரங்கள் முக்கிய பங்காற்றி, உற்பத்தித் திறனையும் விவசாயிகளின் வருமானத்தையும் உயர்த்துகின்றன.

### நிலத் தயாரிப்பு மற்றும் உழவு

பாரம்பரிய வேளாண்மையில் மாட்டுப்படைகள் பயன்படுத்தப்பட்ட இடத்தில், இன்று டிராக்டர், கலப்பை, ரோட்டரி உழவியந்திரம் போன்ற நவீன கருவிகள் பயன்பாட்டில் உள்ளன. இவை குறைந்த நேரத்தில் நிலத்தை ஆழமாகவும் சமமாகவும் உழுது விதைப்பிற்குத் தயார் செய்ய உதவுகின்றன. இதனால் உழைப்பு செலவு குறைந்து, பயிரிடும் காலத்தையும் துல்லியமாக நிர்ணயிக்க முடிகிறது.

### விதைப்பு மற்றும் நடவு

விதைப்பு கட்டத்தில் விதைப்புப் பொறிகள் மற்றும் நாற்று நடவு இயந்திரங்கள் பெரும் உதவியாக உள்ளன. விதைகள் சரியான ஆழத்திலும் இடைவெளியிலும் விதைக்கப்படுவதால், முளைப்பு சீராகவும் பயிர்களின் வளர்ச்சி சமமாகவும் அமைகிறது. குறிப்பாக நெல் சாகுபடியில் நாற்று நடவு இயந்திரங்கள் தொழிலாளர் பற்றாக்குறையை பெரிதும் சமாளிக்கின்றன.

### உரமிடுதல் மற்றும் நீர்ப்பாசனம்

உரங்களைச் சீரான அளவில் பயிர்களுக்கு வழங்க உரம் தெளிக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதேபோல் சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் போன்ற நவீன முறைகள் நீரைச் சிக்கனமாக பயன்படுத்த உதவுகின்றன. இதனால் நீர் வளம் பாதுகாக்கப்படுவதுடன், பயிர்களின் வளர்ச்சியும் மேம்படுகிறது.

### களை, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை

களை அகற்றுவதற்கு பவர் வீடர் போன்ற இயந்திரங்கள் பயன் படுத்தப்படுகின்றன. பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்த மருந்து தெளிப்புப் பொறிகள் பயன்படுகின்றன. இவை குறைந்த நேரத்தில்

நேரத்தில் பெரிய பரப்பளவில் செயல்படுவதால், பயிர்கள் பாது காப்பாக வளர்க்கப்படுகின்றன.

**அறுவடை செயல்பாடுகள்**

அறுவடை கட்டத்தில் ரீப்பர் மற்றும் கம்பைன் ஹார்வெஸ்டர் போன்ற இயந்திரங்கள் மிகுந்த பங்காற்றுகின்றன. இவை அறுவடை, தானிய பிரித்தல் மற்றும் சுத்திகரிப்பு ஆகிய பணிகளை ஒரே நேரத்தில் நிறைவேற்றுகின்றன. இதனால் தானிய இழப்புகள் குறைந்து, நேரமும் உழைப்பும் சேமிக்கப்படுகிறது.

**பிந்தைய செயலாக்கம் மற்றும் சேமிப்பு**

அறுவடைக்குப் பிறகு தானிய உலர்த்தி இயந்திரங்கள் மற்றும் சேமிப்பு வசதிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை விளை பொருட் களின் தரத்தை பாதுகாக்கவும், சந்தைப்படுத்தலை எளிதாக்கவும் உதவுகின்றன.

**இயந்திரமயமான வேளாண்மையின் நன்மைகள்**

இயந்திரமயமான வேளாண்மை தொழிலாளர் பற்றாக்குறையை தீர்க்கிறது. உற்பத்தித் திறனை அதிகரித்து, செலவைக் குறைத்து, விவசாயிகளுக்கு நிலையான வருமானத்தை வழங்குகிறது. மேலும் இளம் தலைமுறையினரை வேளாண்மையை நோக்கி ஈர்க்கும் முக்கிய காரணமாகவும் இது விளங்குகிறது.

**சவால்கள் மற்றும் தீர்வுகள்**

இயந்திரங்களின் அதிக விலை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஒரு சவாலாக உள்ளது. இதை சமாளிக்க அரசு வழங்கும் மானியத் திட்டங்கள், இயந்திர வாடகை மையங்கள் போன்றவை உதவி கரமாக உள்ளன.

உழவு முதல் அறுவடை வரை இயந்திரங்கள் நவீன வேளாண் மையின் முதுகெலும்பாக விளங்குகின்றன. சரியான திட்டமிடலு டனும் அறிவியல் முறைகளுடனும் இயந்திரங்களை பயன்படுத்தி னால், வேளாண்மை லாபகரமானதோடு நீடித்த வளர்ச்சியையும் அடையும். இதன் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரமும் நாட்டின் உணவு பாதுகாப்பும் உறுதி செய்யப்படும்.

மேலும் விபரங்களுக்கு, ம.காவ்யா, இளங்கலை வேளாண் மாணவி, முனைவர் பா.குணா, இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், முனைவர் இர.மகாலட்சுமி, ம.பானுப்பிரியா, குழு மேற்பார்வையாளர்கள், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna8789@ gmail. com, கைபேசி எண் : 99446 41459 ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

# உயிரியல் நோய் மேலாண்மை குறித்து செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.17

நாமக்கல் மாவட்டம், ராசம்பாளையம் கிராமத்தில், பிஜிபி வேளாண்மை கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்காக டிரைகோடெர்மா விரிடி மற்றும் நிலக்கடலை புண்ணாக்கு கரைசல் தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்த செய்முறை விளக்கத்தை நடத்தினர். இந்த நிகழ்ச்சி, மண் மூலம் பரவும் நோய்களை இயற்கை முறையில் கட்டுப்படுத்தும் நோக்கில் நடைபெற்றது.

செய்முறையில், 10 லிட்டர் தண்ணீரில் 250 கிராம் பொடியாக்கப்பட்ட நிலக்கடலை புண்ணாக்கை கலந்து, சுத்தமான தொட்டி/வாளியில் 12-24 மணி நேரம் நிழலில் புளிக்க விடப்பட்டது. பின்னர், அந்த கரைசலில் 10 கிராம் டிரைகோடெர்மா விரிடி சேர்க்கப்பட்டு நன்கு கலக்கப்பட்டது.

இதனால் பயிர்களுக்கு பாதுகாப்பான உயிரியல் பூஞ்சை எதிர்ப்பு கரைசல் தயாரிக்கப்பட்டது. இந்த கரைசல், நாற்று நடவு செய்வதற்கு முன் 20-30 நிமிடங்கள் நாற்று மூழ்கடிப்பு முறையில் பயன்படுத்தப்படுவது விளக்கப்பட்டது.

இதன் மூலம் வேர்ச் சிதைவு, வாடல் போன்ற நோய்கள் குறைவதுடன், வேர்களின் வளர்ச்சி மேம்படுகிறது என தெரிவிக்கப்பட்டது.

மேலும், இந்த கரைசலை காலை அல்லது மாலை நேரத்தில் பயன்படுத்த வேண்டும் என்றும், அதிக வெப்ப நேரங்களை தவிர்க்க வேண்டும் என்றும் மாணவர்கள் அறிவுறுத்தினர்.

குளிர்ந்த, மேகமூட்டமான நாளில் நாற்று நடவு செய்வது சிறந்தது எனவும் கூறப்பட்டது.


# மாமரத்தில் சிவப்பு எறும்பை கட்டுப்படுத்தும் சோப்பு கரைசல்



நாமக்கல், பிப்.17

பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்கள் கிராமப்புற அனுபவ பயிற்சியின் கீழ் நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி வட்டாரம், தேவராயபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் மூலம் மாமரங்களை பாதிக்கும் சிவப்பு எறும்பு கட்டுப்படுத்தும் முறை பற்றி விளக்கமளித்தனர். மாமரத்தில் காணப்படும் சிவப்பு எறும்புகள் இலைகள், மலர்கள் மற்றும் சிறிய பழங்களுக்கு சேதம் விளைவித்து விளைச்சலைக் குறைக்கக்கூடியவை. சில நேரங்களில் இவை இலைகளை மடித்து கூடுகள் அமைத்து, சாறு உறிஞ்சும் பூச்சிகளை பாதுகாப்பதால் மரத்தின் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது. இதை கட்டுப்படுத்த சோப்பு கரைசல் ஒரு எளிய, குறைந்த செலவு மற்றும் சுற்றுச்சூழல் நட்பு முறையாகும்.

இதற்காக 1 லிட்டர் தண்ணீரில் 20-30 கிராம் சலவை சோப்பு அல்லது 15-20 மில்லி திரவ சோப்பை நன்றாக கரைத்து, வடிகட்டி ஸ்ப்ரேயர் மூலம் எறும்புகள் அதிகமாக காணப்படும் தண்டு, கிளைகள் மற்றும் இலைகள் மீது காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். கடும் வெயிலில் தெளிக்காமல் இருக்க வேண்டும், ஏனெனில் இலைகள் கருகும் அபாயம் உள்ளது. சோப்பு கரைசல் எறும்புகளின் வெளிப்புற பாதுகாப்பு படலத்தை சேதப்படுத்தி அவற்றை கட்டுப்படுத்துகிறது. 7-10 நாட்களுக்கு ஒருமுறை தேவைக்கேற்ப மீண்டும் தெளிக்கலாம். முதலில் ஒரு சிறிய பகுதியில் சோதனை செய்து பார்த்து பின்னர் முழு மரத்திலும் பயன்படுத்துவது நல்லது. இந்த முறை மனிதர்களுக்கும் பயிர்களுக்கும் பாதுகாப்பானதாக இருந்து, மாமரத்தில் சிவப்பு எறும்பு தாக்குதலை திறம்பட கட்டுப்படுத்த உதவுகிறது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333